


புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ பிப்ரவரி. 09, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 126 ❖ ரூ.10

## என் மீதான நம்பிக்கை, எதிர்க்கட்சிகளுக்குப் புரியாது

# இந்தியா

## பல நாடுகளில் நிலையற்ற தன்மை உருவாகி பணவீக்கமும், வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழலிலும் இந்தியா 5-வது பொருளாதாரமாக உருவெடுத்திருக்கிறது ; பிரதமர் மோடி

புதுடெல்லி, பிப். 09–

“மோடி மீதான இந்தியாவின் நம்பிக்கை என்பது எதிர்க்கட்சிகளின் புரிதலுக்கு அப்பாற்பட்டது” என்று நாடாளுமன்ற மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில்நேற்றுஉரை நிகழ்த்தினார். அப்போது, ”நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரையின்மூலம்குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, நமக்கும் (நாடாளுமன்ற உறுப்பினர்கள்) நாட்டு மக்களுக்கும் சிறப்பாக வழிகாட்டிஉள்ளார்.அவர் குடியரசுத் தலைவராக இருப்பது நாட்டில் உள்ள ஒவ்வொருபெண்ணுக்கும் ஊக்கமளிக்கிறது.

பழங்குடி சமூகத்தின் பெருமைமிகு அடையாளமாக நமது குடியரசுத் தலைவர் உள்ளார். நாடு சுதந்திரம் அடைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு பழங்குடி மக்களுக்கு பெருமித உணர்வும், தன்னம்பிக்கையும் திரவுபதி முர்முவால் கிடைத்துள்ளது. இதற்காக நாடு அவருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளது.

100 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் பெருந்தொற்று, (உக்ரைன்) போர் உள்ளிட்ட காரணங்களால் உலகம் பிளவுபட்டுள்ளது. இந்தச் சூழலிலும், இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நமது நாடு உறுதியாக நிற்கிறது. நாட்டு மக்கள் அனைவர் மனங்களிலும் நம்பிக்கையும் பெருமித உணர்வும்நிரம்பிஉள்ளது.

குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது சிலர் அதை புறக்கணித்துவிட்டு செல்கிறார்கள். ஒரு பெரிய தலைவரோ குடியரசுத்தலைவரையே அவமதிக்கும் வகையில் பேசுகிறார். அவர்களின் உள்ளங்களில் ஆழமாக ஊறிப்போன வெறுப்பின் வெளிப்பாடாகவே அது இருந்தது.

கரோனா பெருந்தொற்று மற்றும் போர் காரணமாக பல நாடுகளில் நிலையற்ற தன்மை உருவாகி உள்ளது. பணவீக்கமும் வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்துள்ளது. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலிலும் இந்தியா 5-வது பொருளாதாரமாக உருவெடுத்திருக்கிறது என்றால், நாட்டு மக்களில் யாருக்குத்தான் பெருமிதம் இருக்காது? நமது நாட்டின் இந்த சாதனை யாருக்கேனும் வேதனையை தந்திருக்குமானால், அவர்கள் தங்களை சுய ஆய்வுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவை, நேர்மறையாகவும், நம்பிக்கையுடனும் பார்க்கிறது. ஜி20 தலைமையை ஏற்கும் வாய்ப்பு இந்தியாவுக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சி தரும் விஷயம். இது 140 கோடி மக்களையும் பெருமிதம் கொள்ள வைத்துள்ளது. ஆனால், இதுகூட சிலரை வேதனைப்பட வைத்துள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது.

இந்தியா வலிமை பெற்றுள்ளது; அதன் மதிப்பு உயர்ந்துள்ளது; அதன் மீதான நம்பகத்தன்மை மேம்பட்டுள்ளது. இந்தியாவில் புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகில் உள்ள நம்பகமான அமைப்புகளும், ஆழமாக ஆராயும் நிபுணர்களும் இந்தியாவை நம்பிக்கையுடனும் ஆச்சரியத்துடனும் பார்க்கிறார்கள். இது எப்படி நிகழ்கிறது? ஒட்டுமொத்த உலகமும் எப்படி இந்தியாவை நம்பிக்கையுடன் பார்க்கிறது?

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் இருந்தது. இந்திய வரலாற்றிலேயே 2004-14 காலகட்டம்தான் முழுமையான ஊழல் காலகட்டம். அந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பல பகுதிகளிலும் பயங்கரவாத தாக்குதல்கள் நிகழ்ந்தன.

மோடி மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கை செய்தித்தாள்களில் தலைப்புச் செய்தியாக வருவதாலோ அல்லது தொலைக்காட்சிகளில் தோன்றுவதாலோ அல்ல. மக்களின் நலனுக்காகஒட்டுமொத்த வாழ்க்கையையும் செலவிட்டு வருவதால். மோடி மீதான இந்தியாவின் நம்பிக்கை, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் புரிதலுக்கு அப்பாற்பட்டது.

இந்தியாவின் தொழில்நுட்ப கட்டமைப்புகள் அதன் வலிமைக்கு மிகப் பெரிய காரணம். அதுதான் நவீன இந்தியாவை உருவாக்கி வருகிறது. இது குறித்து உலகம் ஆய்வு செய்து வருகிறது. ஜி20 மாநாட்டுக்காக நான் பாலி சென்றபோது, டிஜிட்டல் இந்தியா குறித்து பலரும் பாராட்டு தெரிவித்தார்கள். இந்தியாவில் இது எவ்வாறு சாத்தியமாகியது என்பதை அறிந்து கொள்ள அவர்கள் ஆர்வமாக இருந்தார்கள். ஆனாலும், இந்தியாவின் முன்னேற்றத்தை, வளர்ச்சியை சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நாட்டு மக்கள் நிகழ்த்தி வரும் சாதனையைப் பார்க்க அவர்கள் மறுக்கிறார்கள். இந்தியா இன்று அடைந்துள்ள அத்தனை சாதனைகளும் 140 கோடி மக்களால் ஏற்பட்டது” என்று அவர் பேசினார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம், இந்து கால்லூரியில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயிலும் மணவிகளுக்கு மாதம் ரூ.1000/- உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தில் மேலும் 1,04,347 மாணவகள் பயன்பெறும் வகையில் புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை தொடங்கி வைத்து 10 மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். இவ்விழாவில் அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கீதா ஜீவன், சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகர், ஏ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், சமூக நலன் மற்றும் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத் துறை இயக்குநர் த.ரத்னா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகத்தை கண்டித்து ஏஐடியுசியுடன் இணைந்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை , பிப். 09–

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகத்தின் சர்வாதிகாரப் போக்கை கண்டித்து மாவட்ட விளையாட்டு மைதானம் முன்பு ஏஐடியுசியுடன் இணைந்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.



தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லாத ஒரு சிறப்பாக புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகத்திற்கு மாவட்ட விளையாட்டு மைதானம் பேருந்து நிலையம் அருகாமையிலேயே உள்ளது அதேபோல் விளையாட்டு மைதானத்தை சுற்றியே பல நூற்றுக்கணக்கான குடியிருப்புகளும் உள்ளன ஆதலால் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் புத்துணர்ச்சி பெறவும் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும் நாள்தோறும்உடற்பயிற்சி செய்வதற்காக காலை, மாலைஇருவேளையிலும் விளையாட்டு மைதானத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஆண்டாண்டு காலமாக விளையாட்டு மைதானம் அமைந்த போதே இன்னும் சொல்ல வேண்டும் என்றால் அதற்கு அஸ்திவாரம் போட்ட போதில்இருந்தேஇதனை பராமரிக்கும் பணியில் அன்றுமுதல்இன்றுவரை தீ பெஸ்ட் வாக்கர்ஸ் கிளப் என்ற அமைப்பு ஒன்று நல்லெண்ணம் படைத்த நபர்களால் உருவாக்கப்பட்டு நடைபாதை பராமரிப்பு பணிகள் அரசாங்கத்தை நம்பி இல்லாமல் அச்சங்கத்தின் மூலமாகவோ பராமரிப்பு பணிகள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றது. தற்போதைய மாவட்ட கலெக்டர் ,மாவட்ட விளையாட்டு அலுவலர் உள்ளிட்டோர் பொதுமக்களுக்கு அவர்களின் சுதந்திரத்திற்கு பெரும் தடையாக இருப்பதாகவும்குறிப்பாக விளையாட்டுத்துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் பதவி ஏற்றதிலிருந்து பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு விளையாட்டு மைதானத்தை ஆண்டாண்டு காலமாக பயன்படுத்தி வரும் பொதுமக்களுக்கும் தீ பெஸ்ட் வாக்கர்ஸ் கிளப்பிற்கும் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக குற்றச்சாட்டப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாகவிளையாட்டு மைதானத்திற்குள் வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனத்தை வைக்க பொது மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் மைதானத்திற்கு எதிரிலேயே புதுக்கோட்டை - மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் பொதுமக்கள் தங்களின் வாகனங்களை வைத்து வருகின்றனர். இதனால் அவ்வப்போது விபத்துகளும் நடைபெற்று வருகின்றது. வாகனங்களும் திருடு போகும் சூழல் ஏற்படுகின்றது. அது மட்டும் இல்லாமல் வாக்கிங் செல்ல வரும் நபர்களிடம் மாத கட்டணம் செலுத்த வேண்டும் என்ற நிர்பந்தமும் விளையாட்டுதுறை நிர்வாகத்தால் சமீபத்தில் சொல்லப்பட்டுள்ளதால் வெகுண்டெழுந்த பொதுமக்கள், வாக்கஸ் கிளப் நிர்வாகிகள் நேற்று மாவட்ட விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திமுகவின் கூட்டணி கட்சியான கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதித்துவ அங்கமான ஏஐடியுசி சார்பில் ஆதரவு தெரிவிக்கப்பட்டு அதன் நிர்வாகிகள் கலந்து கொண்டு மாவட்ட நிர்வாகத்திற்கும் தமிழக அரசுக்கும் எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## ஈரோடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு முன்னாள் நீதிபதி சதாசிவம் திடீர் விசிட்

### தான் படித்த வகுப்பறையில் அமர்ந்து நெகிழ்ச்சி

ஈரோடு, பிப். 09 –

ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை அருகே சிங்கம்பேட்டை பகுதியில் அரசு மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் படித்த முன்னாள் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியும், கேரள மாநில முன்னாள் கவர்னருமான பி.சதாசிவம் பள்ளிக்கு திடீரென வந்திருந்தார்.



அவரை கண்டதும் இன்ப அதிர்ச்சி அடைந்த ஆசிரியர்கள் வரவேற்பு அளித்து பள்ளிக்கு அழைத்து சென்றனர். பள்ளிக்குள் சென்ற சதாசிவம் தான் படித்த வகுப்பறைகளை பார்வையிட்டு வகுப்பறைக்குள் அமர்ந்து நெகிழ்ந்தார். தான் படித்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை நினைவு கூர்ந்து ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து தான் படித்த வகுப்பறையில் மாணவர்களிடம் கலந்துரையாடினார். நன்றாக படித்து தன்னை போல் ஒரு உயரிய பதவிக்கு வர வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பின்னர் அவர் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகநிர்வாகிகள் மற்றும் முன்னாள் மாணவர்களிடம் பள்ளியின் தற்போதைய வளர்ச்சி குறித்து கேட்டறிந்தார். மேலும் பள்ளியின் நலன் கருதி பள்ளிக்கு தேவையான வசதிகள், அதனை இந்த பள்ளியில் படித்து உயர்ந்த நிலையில் உள்ள உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் என அனைவரிடமும் கலந்து ஆலோசித்து பள்ளிக்கு தேவையான வளர்ச்சிப் பணிகளை எவ்வாறு செய்யலாம் என்பது குறித்தும்ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் பள்ளி வளாகத்திற்குள் சென்று பள்ளிஆசிரியர்கள்சார்பில் வைக்கப்பட்ட காய்கறி செடிகள் தோட்டத்தை பார்வையிட்டார். அதே போல் பள்ளி வளாகத்திற்குள் செல்லும் மின் கம்பங்களால் மாணவர்களுக்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் அப்புறப்படுத்த அதிகாரிகளுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் ஆசிரியர்களிடம் கேட்டுக்கொண்டார். அப்போது பள்ளியின் தலைமை ஆசிரியர் நாகேந்திரன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகநிர்வாகிகள் உள்பட பலர் உடன் இருந்தனர்.

## வேலையின்மை அதிகரிக்கும் வேளையில் அதானி போன்ற நிறுவனங்களில் அரசு முதலீடு செய்வதா? கார்கே காட்டம்

புதுடெல்லி , பிப். 09 –

ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் வாக்குறுதி என்னானது என்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்விஎழுப்பிஉள்ளார்.



குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மல்லிகார்ஜுன கார்கே நேற்று பேசுகையில்: ”ஆண்டுதோறும் 2 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று பிரதமர்மோடி வாக்குறுதி அளித்திருந்தார். கடந்த 9 ஆண்டுகளில் 18 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். எங்கே அந்த 18 கோடி வேலைவாய்ப்புகள்? அதைக்கூட விட்டுவிடுங்கள். அரசு துறைகளில் காலியாக உள்ள 30 லட்சம் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. இதைஎப்போது நிரப்புவீர்கள்?

தனியார் நிறுவனங்களில் அரசு ரூ.82 ஆயிரம் கோடியை முதலீடு செய்துள்ளது. நமது நாட்டில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களில் 10 லட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். ஆனால், மத்திய அரசோ பொதுத் துறை நிறுவனங்களில் முதலீடுகளை செய்யாமல், அதானி போன்ற குறிப்பிட்ட சில தனியார் நிறுவனங்களில் முதலீடு செய்கிறது. ஆனால், தனியார் நிறுவங்களில் 30 ஆயிரம் பேர்தான் பணியாற்றுகிறார்கள். பிரதமர் நரேந்திர மோடியின் திட்டங்களுக்காக நாட்டு மக்கள் அதிக விலை கொடுக்க வேண்டி உள்ளது.

ஆக்ஸ்ஃபாம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, நாட்டின் வளங்களில் 62 சதவீதம் நாட்டு மக்களில் 5 சதவீதத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏழைகளிடம் நாட்டின் வளத்தில் 3-4 சதவீதம் மட்டுமே உள்ளது. குடியரசுத் தலைவரின் உரையில் இது குறிப்பிடப்படவே இல்லை’’ என்று மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# முக சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுமி டானியாவை நேரில் சந்தித்து நலம் விசாரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



ஆவடி பிப்.09-

முக சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுமி டானியாவை நேரில் சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்தார்.

சென்னை, ஆவடியை அடுத்த மோரை, வீராபுரம் ஸ்ரீவாரி நகரைச் சேர்ந்தவர் ஸ்டீபன்ராஜ். இவரது மனைவி சவுபாக்யா. இவர்களது 9 வயது மகள் டானியா. 4-ம் வகுப்பு படித்து வருகிறார். எல்லா குழந்தைகளும் போல டானியாவும் 3 வயது வரை இயல்பாக வளர்ந்தார். இதற்கிடையே, 3½ வயதுக்கு பின்னர் டானியாவின் முகத்தில் தோன்றிய சிறிய கட்டி அவரது வாழ்க்கையை புரட்டிப் போட்டது. பல்வேறு மருத்துவப் பரிசோதனைக்கு பின்னர் சிறுமி டானியாவுக்கு அரிய வகை முகச்சிதைவு நோய் பாதிப்பு இருப்பது தெரிந்தது. நாட்கள் செல்ல செல்ல டானியாவின் ஒரு பக்க முகம் முழுவதும் சிதையத் தொடங்கியது. இதனால் பள்ளியிலும் டானியாவிடம் மற்ற சிறுமிகள் பாகுபாடு காட்டியதால் அவர் கடும் மன உளைச்சலுக்கு ஆளானார்.

மேலும் டானியாவுக்கு அறுவை சிகிச்சை செய்ய போதுமான பண வசதி இல்லை. அவருக்கு அரசு உதவ வேண்டும் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்தனர். இதைத்தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் சிறுமி டானியாவை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் சிறுமிக்கு தேவையான சிகிச்சை அளிக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இதனையடுத்து தண்டலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிறுமி டானியாவுக்கு அறுவை சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி கடந்த 23-ம் தேதி சிறுமி டானியாவுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதனை தொடர்ந்து சிறுமி டானியாவுக்கு சமீபத்தில் 2-வது அறுவை சிகிச்சை நடந்து முடிந்தது. இந்நிலையில், முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு 2 முறை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சிறுமி டானியாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து நலம் விசாரித்து சிகிச்சை பிறகு எவ்வாறு இருக்கிறது என கேட்டறிந்தார். அவருடன் அமைச்சர்கள் பொன்முடி மற்றும் நாசர் உடனிருந்தனர்.

### கந்தர்வகோட்டை அருகே எய்டு இந்தியா சார்பில்

# 5 இலவச வீடுகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை அடிக்கல் நாட்டினார்




கந்தர்வகோட்டை பிப்.09-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையை அடுத்த புனல் குளத்தில் 5 குடும்பங்களுக்கு இலவச வீடுகளுக்கான அடிக்கல்லை சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை நாட்டினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளில் கஜா புயலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு எய்டு இந்திய நிறுவனம் சார்பில் இலவச வீடுகள் கட்டி கொடுக்கப்படுகிறது. மற்றும் ஏழைக் குடும்பங்களை சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகைகளையும் வழங்கி வருகிறது. அதனொரு பகுதியாக கந்தர்வகோட்டையை அடுத்து புனல் குளத்தில் ரூபாய் 12 லட்சம் மதிப்பில் 5 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவில் கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கவிவர்மன், மாவட்டக் கவுன்சிலர் ஸ்டாலின் நாராயணசாமி, எய்ட் இந்தியா நிறுவனத்தின் மாநில இணைச் செயலாளர் தாமோதரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜா, மாநில நிர்வாகி சாமிநாதன், விவசாயிகள் சங்கமாவட்டசெயலாளர் ராமையன், விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சலோமி, வானவில் மன்றக் கருத்தாளர்கள் தெய்வீக செல்வி, வசந்தி, சிபிஎம் ஒன்றியச் செயலாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# ஆவடி அருகே மின் இணைப்பு வழங்குவதற்கு லஞ்சம் வாங்கிய மின்வாரிய அதிகாரி கைது

ஆவடி பிப்.09-

ஆவடி அருகே புதிய வீடு கட்டுவதற்கு மின் இணைப்பு வழங்க ரூ.9 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய அதிகாரி கைது செய்யப்பட்டார்.

சென்னை, ஆவடி அடுத்த கோவில்பதாகை திருமுல்லைவாயில் சாலையில் வசிப்பவர் கார் டிரைவர் இத்ரீஸ்(42). இவர் கோவில்பதாகை பகுதியில் சொந்தமாக வீடு கட்டுவதற்காக தற்காலிக மின் இணைப்பு பெற வேண்டி கோவில்பதாகை மின்வாரிய அலுவலகத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மனு செய்தார். அதைத் தொடர்ந்து அவரது மனு பரிசீலனை செய்யப்படாமல் கிடப்பில் போடப்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து மின்வாரிய அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றும் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தை சேர்ந்த பாளையம்(50) என்பவரிடம் சென்று அனுமதியளிக்குமாறு கேட்டுள்ளார்.

அப்போது அவர் ரூ.9 ஆயிரம் லஞ்சம் கொடுத்தால் தான் மின் இணைப்பு வழங்க பரிந்துரை செய்வேன் என்று கூறியதாக தெரிகிறது. இதையடுத்து லஞ்சம் கொடுக்க மனமில்லாத இத்ரீஸ், கடந்த 6-ந்தேதி திருவள்ளூர் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசில் புகார் கொடுத்துள்ளார். புகாரின் அடிப்படையில், லஞ்ச ஒழிப்பு போலீஸ் துணை சூப்பிரண்டு கலைச்செல்வன் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் தமிழரசி, சுமத்ரா ஆகியோர் கொண்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் கோவில்பதாகை பகுதியில் உள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று, ரசாயன பவுடர் தடவிய ரூபாய் நோட்டுகளை இத்ரீஸிடம் கொடுத்து அனுப்பியுள்ளனர். பின்னர் மின்வாரிய அதிகாரி பாளையத்திடம் இத்ரீஸ் பணத்தை கொடுத்த போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசார் பாளையத்தை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

# மேலக்கடையநல்லூரில் அருள்மிகு ஸ்ரீ ஆதிபராசக்தி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



தென்காசி பிப்.09-

தென்காசி மாவட்டம், மேலக்கடையநல்லூரில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ ஆதிபராசக்தி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட பொறுப்பாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான செல்லத்துரை, கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ், நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், நகர் மன்ற துணைத் தலைவர் ராசையா, ஊர் தலைவர் கருப்பசாமி, ஊர் கணக்கர் சுந்தர்ராஜ், அர்ச்சகர் வேலுச்சாமி, முருகன், தேவராஜ், மாணிக்கம், முருகன், பிச்சையா, கிருஷ்ணமூர்த்தி, வினு, சுப்பிரமணியன், சாமிதுரை, செய்யது மசூது, நல்லையா, சாகுல் ஹமீது, வலசை மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கும்பாபிஷேகத்தை ஆகம முறைப்படி முத்துக்குமார் பட்டர் நடத்தி வைத்தார். நிகழ்ச்சியில் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அம்மனின் அருள் பெற்று சென்றனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அன்னதானத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அரியலூரில் காங்கிரஸ் கட்சியின் எஸ்சி எஸ்டி பிரிவு ஆலோசனைக் கூட்டம்



அரியலூர் பிப்ரவரி.09-

அரியலூரில் காங்கிரஸ் கட்சியின் எஸ்சி எஸ்டி பிரிவு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட எஸ்சி, எஸ்டி பிரிவு ஆலோசனை கூட்டத்திற்கு அதன் மாவட்ட தலைவர் சுரேஷ் தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் டென்னிஸ் வரவேற்றார்.

மேலும் கூட்டத்தில் கட்சி வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் ராஜேந்திரன், அரியலூர் மாவட்ட தலைவர் சங்கர், அரியலூர் நகரத் தலைவர் சிவக்குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜசேகர், அரியலூர் வட்டாரத் தலைவர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர்.

அரியலூர் மாவட்ட அளவிலான காங்கிரஸ் கட்சி, எஸ்சி, எஸ்டி பிரிவு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்ட கூட்டத்தின் முடிவில், மாவட்டத் துணைத் தலைவர் தேவர் நன்றி கூறினார்.

# மெரினாவில் அமையவுள்ள கருணாநிதியின் பேனா நினைவு சின்னத்திற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு



டெல்லி பிப்.09-

சென்னை மெரினாவில் அமைய உள்ள பேனா நினைவு சின்னத்திற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் இலக்கிய பணிகளை போற்றும் வகையில் மெரினாவில் உள்ள அவரது நினைவிடத்திற்கு அருகே கடலில் ரூ.81 கோடியில் பேனா நினைவுச் சின்னம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதி நினைவிடத்தில் இருந்து 360 மீட்டர் தொலைவில் நடுக்கடலில் பேனா சிலை வைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. இந்த சிலை அமைந்துள்ள பகுதிக்கு செல்ல கடற்கரையில் இருந்து சுமார் 650 மீட்டர் நீளத்துக்கு கண்ணாடியிலான மேம்பாலமும் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த பாலம் நிலத்தின் மீது 290 மீட்டரும், கடலின் மீது 360 மீட்டர் அமையும் வகையில் கட்டப்பட உள்ளது.

ரூ.81 கோடி செலவில் அமைக்கப்படும் இந்த பேனா சிலைக்கு 'கலைஞர் பேனா நினைவுச் சின்னம்' என பெயரிடப்பட்டுள்ளது. கடலுக்கு நடுவில் கருணாநிதியின் பேனா நினைவுச்சின்னம் அமைக்க ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், சென்னை மெரினா கடற்கரையில் அமையவுள்ள பேனா நினைவு சின்னத்திற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில் 'கடலில் பேனா நினைவு சின்னம் அமைப்பதால் கடல் வளம் பாதிக்கும், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவே பேனா நினைவு சின்ன திட்டத்தை ரத்து செய்ய தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

# இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க தமாகா விவசாய அணி கோரிக்கை



கறம்பக்குடி பிப்.09-

பருவம் தவறி பெய்த மழையால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என தமாக விவசாய அணி மாநில தலைவர் ரெங்கராஜ் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள கோரிக்கையில், தமிழகத்தில் கடந்த வாரம் பருவம் தவறி பெய்த மழையால் விவசாயிகள் பயிரிட்ட பயிர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இதனையடுத்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் இருபது ஆயிரம் இழப்பீடாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆனால் அந்த தொகை போதுமானதாக இல்லை அதே நிலையில் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூபாய் முப்பது ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். வயல்களில் நாற்று பாவி அதை நடவு நட்டு, வேளை ஆட்கள் கூலி, களை பறிப்பது, உரம் கடுமையாக உயர்ந்துள்ள சூழ்நிலையில் உர செலவு, டீசல் விலை உயர்வால் டிராக்டர் போன்ற இயந்திர கூலி என அனைத்தையும் கணக்கிடும் போது இழப்பீடு போதுமானதாக இல்லை. தங்கள் பயிரை காப்பாற்றி அறுவடை செய்யும் நிலையில் பருவந்தவறிய கனமழையில் அனைத்தும் வீணாகிவிட்டது.

எனவே தமிழக முதல்வர், வேளாண் துறை அமைச்சர் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு ஏக்கருக்கு ரூபாய் முப்பது அயிரம் வழங்கவேண்டும். காலந்தாழ்த்தாமல் அரசு வேளாண் துறை அதிகாரிகளை கொண்டு கணக்கெடுத்து பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீட்டை அதிகரித்து வழங்க வேண்டும்

அடுத்த சாகுபடிக்கு விவசாயிகளுக்கு உதவும் வகையில் இழப்பீட்டை உயர்த்திவழங்கவேண்டும் என தமாகா விவசாய அணி மாநில தலைவர் ரெங்கராஜன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புதுநகர் கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி



கந்தர்வகோட்டை பிப்.09-

கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் புதுநகர் கிராமத்தில் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் தலைமையில் பயிற்சி நடைபெற்றது.

விவசாயிகள் பயிற்சிக்கு வட்டார தொழில்நுட்ப மேலாளர் அனைவரையும் வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் முருகன், கால்நடை உதவி மருத்துவர் செந்தில் ராஜன், உதவி வேளாண்மை அலுவலர் செல்வன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜிவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா, சுப்பிரமணியன், கிராம பஞ்சாயத்து தலைவர் வினோதா முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்

கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் முருகன் சிறுதானியப் பயிர் சாகுபடி செய்வதன் முக்கியத்துவம் பற்றி பேசினார். கால்நடை உதவி மருத்துவர் செந்தில் ராஜன் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும், கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் பற்றியும் அவற்றை தடுக்கும் முறைகள் பற்றியும், கால்நடைகளுக்கு போடப்படும் தடுப்பூசி முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் செல்வன் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

முன்னோடி விவசாயிகள் விவசாயிகளின் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். கந்தர்வகோட்டை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜிவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் பயிற்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப செய்திகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

# அரியலூர் மாவட்ட நண்பர்கள் குழுவின் கலந்துரையாடல் கூட்டம்



அரியலூர் பிப்.09-

புதிதாக அமைக்கப்பட்டுள்ள, அரியலூர் மாவட்ட நண்பர்கள் குழுவுக்கு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இது பற்றி ஓய்வு பெற்ற தொழில் கல்வி ஆசிரியர் நல்லப்பன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

அரியலூர் மாவட்டத்தில் கல்வி, சமூகம், பொருளாதாரம், நல்வாழ்வு, வாழ்வாதாரம், தனிநபர் வருவாய் உள்ளிட்ட அம்சங்களில் உள்ள சவால்கள் மற்றும் தேக்க நிலைகளை கண்டறிந்து, களைவதற்கான முதல் கட்ட ஆலோசனை கூட்டம் அரியலூர் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

அரியலூர் மூத்த முன்னோடி பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் ரோஸ் அறக்கட்டளை இயக்குனர் திருநாவுக்கரசு வரவேற்றுப் பேசினார். மொழியியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர் விக்டர், மணிவாசக மன்ற செயலாளர் இளங்கோ, பள்ளி கல்வி பாதுகாப்பு இயக்க மாவட்ட அமைப்பாளர் அரங்கநாடன், வள்ளலார் கல்வி நிலைய செயலாளர் புகழேந்தி மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்க நிர்வாகி நல்லப்பன் மற்றும் பெண்கள் கூட்டமைப்பு செயலாளர் மிர்சால் மேரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வழக்கறிஞர் சண்முக வேலாயுதம் கூட்டத்தின் நோக்கம் பற்றி பேசினார். சிறப்பு விருந்தினராக மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்ற நீதிபதி ராமராஜ் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

நண்பர்கள் குழு, புதிய நிர்வாகிகள் பற்றிய விபரம்: அரியலூர் மாவட்ட நண்பர்கள் குழுவின் தலைவர் சண்முகவேலாயுதம். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் புகழேந்தி, அரியலூர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் நல்லப்பன், இணை ஒருங்கிணைப்பாளர் இளங்கோ, செந்துறை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் இளவரசன், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், தா.பழூர் ஒன்றியங்கள் திருநாவுக்கரசு, திருமானூர் ஒன்றியம் மணிவேல், ஜெர்சி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழகத்தில் கஞ்சா, போதை பொருட்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது

## திருமண வரவேற்பில் ஜி.கே.வாசன் எம்பி குற்றச்சாட்டு

ஊத்துக்கோட்டை, பிப். 9 -

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், நாகராஜ்கண்டிகை கிராமத்தை சேர்ந்த முரளிதரன்-துர்கா தம்பதியரின் மகள் எம். பார்கவிக்கும், இதே கிராமத்தைச் சேர்ந்த கோபி -அருள்மொழி தம்பதியரின் மகன் எம்.சரண்ராஜ்திருமணம் குமாரநாயக்கன்பேட்டை அருள்மிகு ஸ்ரீ வெக்காளியம்மன் திருக்கோவிலில் கடந்த புதன்கிழமை காலை நடைபெற்றது.



இதே போல் முரளிதரன் - துர்கா தம்பதியரின் மகன் எம். முகிலன், (லேட்) செந்தில்- ருக்மணி தம்பதியரின் மகள் எம்.ஏகவள்ளி என்ற கீர்த்தி திருமணம் ஞாயிற்றுக்கிழமை காலை சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெற்றது.

கும்மிடிப்பூண்டி மேற்கு வட்டார தமாக தலைவர் என்.ஆர்.கே.தாஸ் இல்லத்தைச் சேர்ந்த இந்த திருமணங்களின் வரவேற்பு நிகழ்ச்சி கும்மிடிப்பூண்டி பெத்திக்குப்பம் பகுதியில் உள்ள ஜே.எஃப்.என் பேரடைஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, தமிழ் மாநில காங்கிரஸ் திருவள்ளூர் வடக்கு மாவட்ட தலைவரும், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான எஸ்.சேகர் தலைமை தாங்கினார். இதில், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் எம்.பி கலந்துகொண்டு மணமக்களை நேரில் வாழ்த்தினார்.

இதில், த.மா.கா மாநில செயற்குழு உறுப்பினர் மாரிமுத்து, மாநில நிர்வாகி ஆத்தூர் தாஸ், வட்டார தலைவர் அசோகன், இளைஞரணி மாவட்ட தலைவர் செந்தில்குமார், கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை நிர்வாகிகளும், திமுக, அதிமுக, கம்யூனிஸ்ட், காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், அரசுத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

முன்னதாக ஜி.கே.வாசன் எம்.பி. பத்திரிக்கையாளர்களை சந்தித்தார். அப்பொழுது அவர் கூறும் போது: தமிழகத்தில் கஞ்சா, போதை பொருட்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், இதனால் பள்ளி-கல்லூரி மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் இச்செயலால் பெற்றோர்கள் வேதனை அடைவதாகவும் கூறினார். இதனை தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டினார்.

தமிழக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மாறாக பொது மக்களின் தலையில் விலை ஏற்றம், மின் கட்டண உயர்வு என பல்வேறு சுமைகளை ஏற்றி உள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் நடைபெறும் இடைத்தேர்தலில் அதிமுக அமோக வெற்றி பெறும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என கூறினார்.



தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் சென்னை மண்டல 4 வட்ட 36 பகுதிகளில் கொசுவின் உற்பத்தி அதிகமாக இருப்பதால் 36,41. வது வட்டத்தில் கேப்டன் காட்டன் கணால், கொடுங்கையூர் கணால், பக்கிங் கம்கணால், பகுதியில் (டோனர் )மூலமாக பறக்கும் ஹெலிகாப்டர் மூலமாக கொசுக்கள் உற்பத்தியை தடுக்கும் பணியை மண்டலகுழு தலைவர் நேதாஜி யு.கணேசன்.எம்.சி. தலைமையில் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். டி. சேகர் மாமன்ற உறுப்பினர் மலைச்சாமி ஆகியோர் மருந்து தெளிக்கும் பணியை துவக்கி வைத்தனர் உடன் உதவி சுகாதார அதிகாரி மருத்துவர் சாய்சுதா, சூர்யா பெரிய கருப்பன் ஜெகநாதன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்..*

# செம்பதருப்பு ஊராட்சியில் இலவச மருத்துவ முகாம்



சீர்காழி, பிப். 9-

மயிலாடுதுறை மாவட்டம், செம்பதனிருப்பு ஊராட்சியில் வெல்ஸ்பன் பவுண்டேஷன் ஃபார் ஹெல்த் நாலஜி சார்பில் செம்பதனிருப்பு ஊராட்சி மன்றஅலுவலகம் அருகே பொதுமக்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி முத்துக்குமரன் தலைமை வகித்தார் துணைத் தலைவர் அனிதா பார்த்திபன் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பிரகாஷ் ஊராட்சி செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இதில் திரளான பொருள் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்புகளை வெல்ஸ்பன் பவுண்டேஷன் ஃபார் ஹெல்த் அண்ட் நாலேஜ் சி.எஸ்.ஆர். சமூக பொறுப்புணர்வு அலுவலர் ஜூலியஸ் தூய மணி செய்திருந்தார்.

# பருவம் தவறி பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை புதுச்சேரி வேளாண் அமைச்சர் பார்வையிட்டார்

புதுச்சேரி, பிப். 9 -

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் பருவம் தவறி பெய்த மழையினால் காரணமாக விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது. குறிப்பாக நெற்கதிர்கள் கீழே சாய்ந்த நிலையில் இருந்தது.



இதனை வேளாண் துறை அமைச்சர் தேனி ஜெயக்குமார் புதன்கிழமை காலை நெடுங்காடு, கோட்டுச்சேரி, திருநள்ளாறு, நிரவி திருப்பட்டினம் ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை பார்வையிட்டார். மேலும் பல்வேறு இடங்களில் விவசாயிகளை சந்தித்து விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்தார்.

விவசாயிகளிடம் பேசிய வேளாண் துறை அமைச்சர் முதல்வரிடம் பேசி உரிய இழப்பீடு வழங்கப்படும் என கூறினார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.சிவா, நிரவி - திருப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன், காரைக்கால் மாவட் ஆட்சியர் முகம்மது மன்சூர், வேளாண்துறை இயக்குனர் பாலகாந்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் வீரசெல்வம், கூடுதல் வேளாண் இயக்குனர் செந்தில்குமார், மற்றும் விவசாய பெருமக்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். வேளாண் துறை அமைச்சர் தலைமையில் ஆட்சியர் வளாகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.



மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகத்தின் தலைவர் இப்ராஹிம் பாதுஷா, தமிழ்நாடு வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமியை நேரில் சந்தித்து ஈரோடு கிழக்கு சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் மதச்சார்பற்ற கூட்டணியின் வேட்பாளர் EVKS.இளங்கோவனுக்கு ஆதரவு தெரிவிப்பதாக கடிதம் வழங்கினார். உடன் மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் சீனிவாசன், ஈரோடு மாவட்ட செயலாளர் வனிதா, ஈரோடு மாவட்ட தலைவர் செந்தில்குமார், இளைஞரணி தலைவர் பாரூக், தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் ரஹீம், திருப்பூர் மாவட்ட தலைவர் மகேந்திரன், திருப்பூர் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ஆகியோர் இருந்தனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் டீ போட்டுக் கொடுத்து நூதன பிரச்சாரம்

ஈரோடு, பிப். 9 -

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் 42-வது வார்டுக்கு உட்பட்ட பெரியார் வீதியில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். அப்போது அந்த பகுதியில் உள்ள ஒரு டீ கடைக்கு சென்று டீ போட்டு கொடுத்து வாக்கு சேகரித்தார்.



பின்னர் முன்னாள் அமைச்சர் உதயகுமார் பிரச்சாரத்தில் பேசும்போது, இந்த தேர்தலை ஆளும் கட்சி பண பலம், அதிகார பலம் கொண்டு சந்தித்து வருகிறது. நாங்கள் சத்தியத்தையும், உண்மையும் சொல்லி மக்களை சந்தித்து வருகிறோம்.

திமுக ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு 520 திட்டங்களில் எந்த திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவோம் என்று கூறினர். மகளிருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக கூறினார்கள். மடிக்கணினி திட்டம் கேள்விக்குறியாக இருக்கிறது. பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மடிக்கணினி வழங்குவது தொடர்பாக சாக்கு போக்கு சொல்லி வருகிறார். எனவே முதல் தலைமுறை வாக்காளர்கள் அதிமுகவுக்கு ஓட்டு போட முடிவு செய்து விட்டனர்.

ஈரோடு நகர் பகுதியில் சொத்து வரி உயர்வு, மின்சார கட்டணம் உயர்வு, விலைவாசி உயர்வு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக இருக்கிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். பல்வேறு தடைகளை தாண்டி பல்வேறு துரோகங்களை தாண்டி எடப்பாடி இரட்டை இலை சின்னத்தை மீட்டெடுத்துள்ளார். இந்த ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பணம் பாதாளம் வரை சென்றாலும், அதிகார துஷ்பிரயோகம் செய்தாலும் அதி.மு.க. வெற்றி பெறும். மக்கள் அளிக்கும் தீர்ப்பு ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் விடிவுகாலமாக இருக்கும். எடப்பாடி பழனிசாமி மீண்டும் முதலமைச்சர் ஆவதற்கு இந்த தேர்தல் ஒரு அச்சாரமாக அமையும் என்று கூறி பிரச்சாரம் செய்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கைக்குறிச்சி ஊராட்சியில் திருவரங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவ அலுவலகம் சார்பில் சித்த மருத்துவ முகாம் நடைபெற்றது. கைக்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் ரெங்கநாயகி செல்வம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். திருவரங்குளம் சித்த மருத்துவ அலுவலர் ரெங்கநாயகி, தேவி ஆகியோர் சிகிச்சை அளித்தனர். முகாமில் கலந்து கொண்ட 200-க்கும் மேற்பட்டவர்களுக்கு சித்த மருந்துகள் வழங்கப்பட்டது. அனைவருக்கும் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. மேலும் வர்ம சிகிச்சை, அக சிவப்பு சிகிச்சை உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

# சீர்காழி அருகே குடிதண்ணீருக்காக 2 கி.மீ தூரம் அலையும் கிராம மக்கள், ஆடு,மாடுகளும் தவிப்பு

சீர்காழி, பிப். 9-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே காடுவெட்டி கிராமத்தில் சுமார் நூறு குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் நிலத்தடிநீர் உப்பாக மாறிவிட்டதால் அதனை பயன்படுத்த முடியாது நிலை உள்ளது.




கொள்ளிடம் ஆற்றின் கரையை ஒட்டி அமைந்தும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்திலும் நான்கு நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே தண்ணீர் வருவதால் கிராமத்து பெண்கள் தலையிலும், சிறுவர்கள் சைக்கிளில் குடங்களை கட்டி கொண்டு அடுத்த கிராமத்திற்கும் தண்ணீரைத் தேடி அலைந்து வருகின்றனர். மழை காலத்தில் மக்கள் தண்ணீர் எடுப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது வெளியே செல்ல முடியாத சூழ்நிலையில் குடும்பங்களுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் வீட்டிற்கு தேவையான தண்ணீர் பிடிப்பதிலே நேரம் கடந்து கால தாமதமாக படிக்க செல்ல வேண்டி உள்ளதாகவும் வேதனை படுகின்றனர். மேலும் இந்த கிராமம் கொள்ளிடம் ஆற்றின் கரையை ஒட்டியே அமைந்திருந்தும் எந்த பயனும் இல்லை. ஏன் என்றால் கடல் நீர் உட்புகுந்து கொள்ளிடம் ஆற்று நீரும் முற்றிலும் உப்பாக மாறியதால் ஆற்று நீரை கூட பயன்படுத்த முடியாத அவல நிலை உள்ளது.

கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தில் தினந்தோறும் தண்ணீர் வழங்க வேண்டுமெனவும் அரசுக்கு கிராமமக்கள் பல வருடமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேலும் காடுவெட்டி கிராமத்தில் தண்ணீர் பஞ்சம் அதிகளவில் நிலவுகிறது. ஆடு,மாடுகளும் தண்ணீர் கிடைக்காமல் தவித்து வருகிறது. உடனடியாக தமிழக அரசும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரும் தனி கவனம் செலுத்தி கிராமத்திற்கு தினந்தோறும் குடிநீர் கிடைக்க வழி செய்ய வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருவொற்றியூரில் உள்ள எம்.ஆர்.எப். டயர் தொழிற்சாலை

# சி.எஸ்.ஆர் நிதியில் இருந்து சென்னை மாநகராட்சி மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கல்

சென்னை, பிப். 9 -

திருவொற்றியூர் எல்லையம்மன் கோவில் அருகே உள்ள பெருநகர மாநகராட்சி நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனைக்கு திருவொற்றியூர் MRF டயர் தொழிற்சாலை நிறுவனம் தனது சொந்த CSR நிதியிலிருந்து ரூ. 7 லட்சம் செலவில் மருத்துவமனைக்கு தேவையான அல்ட்ரா சவுண்ட், இசிஜி, அறுவை சிகிச்சை அரங்கை சுத்தப்படுத்தும் மிஷின், பக்கெட், ட்ராலி, ஸ்டீல் ரேக், மற்றும் 50 நாற்காலிகள் உள்ளிட்ட உபகரணங்களை



எம்.ஆர்.எப் பொது மேலாளர் ஜேகப் சாக்கோ, திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே பி சங்கர், மருத்துவமனை அதிகாரி மாலதியிடம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு, டயர் தயாரிப்பு மேனேஜர் பாரதி, CSR. ஒருங்கினைப்பளார் சந்தர், தொழிற்சாலை மெடிகல் ஆபிஸர் நூருல் அமின், மக்கள் செய்தி தொடர்பாளர் நந்தகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ராயபுரம் அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு கூடுதலாக 250 படுக்கை வசதியுடன் கூடிய 4 மாடி கட்டிடம்

## எம்எல்ஏ மூர்த்தி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்

சென்னை, பிப். 9 -

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவின் பேரில் சென்னை ராயபுரம் ஆர்.எஸ்.ஆர்.எம். அரசு மகப்பேறு மருத்துவமனையில் 28 கோடி ரூபாய் செலவில் புதியதாக நவீன வசதிகளுடன் உயர் சிகிச்சைகள் அளிக்கக்கூடிய நான்கு மாடி கட்டிடம் கட்ட ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.



அரசு ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனையில் ஏற்கனவே 610 படுக்கை வசதிகள் உள்ள நிலையில் 28 கோடி ரூபாய் செலவில், புதிதாக கட்டப்படும் நான்கு மாடி கட்டிடத்தில் இரண்டு மாடி தனிமை படுத்தப்பட்ட வார்டும், மற்றொரு இரண்டு மாடி சிறப்பு சிகிச்சை பிரிவுடன் கூடிய 200 படுக்கைகள் அமைப்பதற்காக புதிய நான்கு மாடி கட்டிடம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பொழுது தொடங்கப்பட்ட பணி ஒரு வருட காலத்தில் நிறைவுப்பெற்று மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

சென்னை, திருவள்ளூர் , ஆந்திரா, உள்ளிட்ட வெளி மாநிலங்களிலிருந்து தினமும் ஏராளமான பெண்கள் மகப்பேறு சிகிச்சைக்காக வரும் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் அதிநவீன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி தெரிவித்தார். இந்த மறுத்துவமனையில் மாதத்திற்கு அறுவை சிகிச்சை இல்லாமல் 1000 சுகப்பிரசவம் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் சாந்தி இளங்கோ, மருத்துவமனை உயரதிகாரிகள், மருத்துவர்கள், இராயபுரம் கிழக்கு, மேற்கு பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், பொதுப் பணித்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# தரங்கம்பாடி பள்ளி மாணவிகளுக்கு பாராட்டு மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் விழா

தரங்கம்பாடி, பிப்.9-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் உள்ள புனித தெரசா பள்ளியில் படிக்கும் 2 மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் தமிழக தேர்தல் ஆணையம் நடத்திய தேர்தல் விழிப்புணர்வு ஓவியப்போட்டியில், மாநில அளவில் 3 ஆம் இடம் பெற்ற மாணவிக்கு பாராட்டு விழா நடைப்பெற்றது.



தரங்கம்பாடி புனித தெரசாள் பள்ளியில் படிக்கும், மாணவிகள் சீத்தாலட்சுமி, மோகனப்பிரபா ஆகியோருக்கு முன்னாள் கவுன்சிலர் மாணிக்க.அருண்குமார் வாட்ஸ் ஆப் மற்றும் முகநூல் நண்பர்கள் வாயிலாக கல்வி உதவி தொகை வழங்க ஏற்பாடு செய்திருந்தார்.

அதன் அடிப்படையில் தமிழக ஹயர் கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேஷன் மாநில இணைசெயலாளர் திங்கள்கண்ணன், ஆசிரியை மீனாட்சிவேல்முருகன், தரங்கை ரோட்டரி சங்கத்தலைவர் சக்திமணிகண்டன், குலோத்துங்கன், நந்தக்குமார் சிங்கப்பூர் கிருஷ்ணன், பிரபு, தமிழ்வாணி, உடற்கல்வி ஆசிரியர் சாமிநாதன் ஆகியோர் வழங்கிய நிதியை சமூக ஆர்வலர்கள் முன்னிலையில், மாணவிகளுக்கு வழங்கினர்.

மேலும் தேர்தல் ஆணையம் நடத்திய, தேர்தல் விழிப்புணர்வு ஓவியப்போட்டியில் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற மாணவி பூஜா விற்கு, ஊக்கத்தொகையும், தேர்தல் ஆணையம் வழங்கிய சான்றிதழ்களையும், பதக்கங்கத்தையும், வழங்கி மாணவியை பாராட்டினர்.

கல்வி உதவித்தொகை பெற்றக்கொண்ட மாணவிகள் சீத்தாலட்சுமி, மோகனப்பிரபா மற்றும் மாநில அளவிவில், ஓவியப்போட்டியில் மூன்றாம் இடம்பிடித்த மாணவி பூஜாவையும், ஆசிரியர் மீனாட்சி, வர்த்தசங்க பொருளாளர் இளந்தமிழன், ஷாகினி மரைன் உரிமையாளரும், சமூக ஆர்வலருமான ரமேஷ், ஆசிரியர் மாதவன், தமிழக ஹயர்கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேஷன் செயலாளர், சந்தனசாமி, உடற்கல்வி ஆசிரியர் சாமிநாதன், சமூக ஆர்வலர் ரஜினிமுருகன், ரோட்டரி சங்க பொருளாளர் பிரான்சிஸ், சுலைமான், ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துக்களும், ஆலோசனைகளையும் வழங்கினர்.

தரங்கை வர்த்தக சங்கத்தலைவர் நடராஜன், செயலாளர் பிரவீன் மாணவிகளுக்கு கல்வித்தொகையும், தரங்கை தோகா சங்கத் தலைவர் ராசிக், சுலைமான் சான்றிதழ்களையும், சமூக ஆர்வலர் ரமேஷ் பதக்கமும் அணிவித்தனர்.

கல்வித் உதவித்தொகையை பெற்றுக்கொண்ட மாணவிகளும், மாணவி பெற்றோரும், சமூக ஆர்வலரும் தமிழக ஹயர்கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன் பொருளாளரும், பொதுதொழிலாளர் சங்க பொருப்பாளருமான முன்னாள் கவுன்சிலர் மாணிக்க. அருண்குமாருக்கும், உதவிய நன்கொடையாளருக்கும் நன்றிகள் தெரிவித்தனர். இந்நிகழ்வில் கே.பி.எம். செல்வக்குமார், கருப்புசாமி, ரொட்டேரியன் தீபக் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் சூறாவளி பிரச்சாரம் தீவிரம்

ஈரோடு, பிப். 9 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது. காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சியினர், அமைச்சர்கள் தீவிர பிரசாரம் செய்து வருகிறார்கள். இதேபோல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், உதயநிதி ஸ்டாலின் மற்றும் கனிமொழி எம்.பி., மற்றும் காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, திருமாவளவன், வைகோ, மற்றும் கம்யூனிஸ்டு கட்சி தலைவர்களும் பிரசாரம் செய்கிறார்கள். இதற்கான அதிகார பூர்வ தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அ.தி.மு.க. வேட்பாளர் கே.எஸ். தென்னரசுவை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி வருகிற 12-ந்தேதி முதல் பிரசாரம் தொடங்குகிறார் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. 12-ந்தேதி பிரசாரத்தை தொடங்கும் எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து 5 நாட்கள் தீவிர பிரசாரம் செய்யப்போவதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது. பின்னர் தேர்தலுக்கு முந்தைய 2 நாட்களிலும் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதனை ஆதரித்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வருகிற 13-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை 3 நாட்கள் பிரசாரம் செய்கிறார். 13-ந்தேதி மாலையில் திருநகர் காலனியில் பொதுக்கூட்டத்தில் சீமான் பேசுகிறார். தொடர்ந்து 2 நாட்கள் வேட்பாளருடன் பிரசாரம் செய்து ஆதரவு திரட்டுகிறார் என்று கட்சி நிர்வாகிகள் தெரிவித்து உள்ளனர்.

தே.மு.தி.க. வேட்பாளர் ஆனந்த்தை ஆதரித்து பிரேமலதா விஜயகாந்த் 12-ந் தேதி பிரசாரம் செய்வதாக இருந்தது. ஆனால் திடீரென அது ஒத்திவைக்கப்பட்டது. பிரேமலதா, விஜயபிரபாகர் பிரசாரம் குறித்த விவரம் இன்னும் ஓரிரு நாளில் தெரியவரும் என்று கட்சியினர் தெரிவித்து உள்ளனர்.

# செந்துரான் பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்



புதுக்கோட்டை பிப்.09-

புதுக்கோட்டை அருகேயுள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் சென்னையை சேர்ந்த லூகாஸ் டிவிஎஸ் நிறுவனத்திற்கான வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்து பேசினார். கல்லூரியின் தலைவர் செல்வராஜ் , மற்றும் நிர்வாக இயக்குநர் வயிரவன் முன்னிலை வகித்தார்கள். கல்லூரியின் முதன்மைச் செயல் அலுவலர் கார்த்திக், மாணவர்கள் கல்லூரியில் கடைபிடித்த ஒழுக்கத்தை வேலைக்கு செல்லும் நிறுவனத்திலும் கடைபிடித்து, ஈடுபாட்டுடன் உழைத்து பெற்றோருக்கும் கல்விக்கும் நற்பெயர் பெற்றுத்தந்து, வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்திட வாழ்த்து தெரிவித்தார்.

லூகாஸ் டிவிஎஸ் நிறுவனத்திற்க்கு ஆட்களை தேர்வு செய்ய வருகை தந்திருந்த அந்நிறுவனத்தின் துணை மேலாளர் - (உற்பத்தி) - ரஷித், தகுதியுடைய இயந்திரவியல், வாகனவியல் மற்றும் மின்னியல் துறையைச் சேர்ந்த 82 மாணவர்களை குழு திறனறிவுத் தேர்வு, நேர்முகத்தேர்வு ஆகியவற்றிற்கு உட்படுத்தி மாணவர்களின் திறமையை இனம்கண்டார். இத்தகை தேர்வுக்குப் பின் 76 மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கான ஆணையை வழங்கினார்.

அதன் பிறகு லூகாஸ் டிவிஎஸ் நிறுவனத்தின் துணைமேலாளர் - (உற்பத்தி) ரஷித் மாணவர்களிடையே உரையாற்றினார். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தங்களது நிறுவனத்தில் சம்பளமாக ஆண்டுக்கு ரூ 1.69லட்சம் வழங்கப்படுவதாக தெரிவித்தார்

இவ்வேலைவாய்ப்பு முகாமில் உபதலைவர் நடராஜன், செயலாளர் தியாகராஜன், தாளாளர் ராமையா, செயல் இயக்குநர் பாண்டிகிருஷ்ணன், மனிதவள இயக்குநர் மீனா வயிரவன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த வேலை வாய்ப்பு முகாம் சிறப்புடன் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் வேலைவாய்ப்பு அலுவலர் லெட்சுமி சிறப்பாக செய்திருந்தார். விழாவின் இறுதியாக மெக்கானிக்கல் துறை மூத்த ஆசிரியர் கணேசன் நன்றி தெரிவித்தார்.

# திருவரங்குளம் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம்



திருவரங்குளம் பிப்.09-

திருவரங்குளம் வட்டார வேளாண்மை அலுவலக அரங்கில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் கீழ் 2022-23 ஆண்டிற்கான வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேல் தலைமையில் நடைபெற்றது.

அப்போது விவசாயிகளிடம் பேசிய வேளாண்மை உதவி இயக்குனர் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டம் மற்றும் உழவர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் மானிய விவரங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். வம்பன் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் தொழில்நுட்ப வல்லுநர் பாலமுருகன் விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்கள் பற்றியும் வானிலை சார்ந்த தொழில்நுட்பங்களையும் விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தின் மூலம் விவசாயிகள் அதிகம் லாபம் சம்பாதிப்பது பற்றியும் எடுத்துக் கூறினார். விவசாயிகள் ஆலோசனை குழு தலைவர் வடிவேல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்ட ஏற்பாடுகளை தொழில் நுட்ப மேலாளர் மகேந்திரன் மற்றும் முருகன் கவியரசு ஆகியோர் செய்து இருந்தனர்.

# கந்தர்வக்கோட்டை ஒன்றியம் ஆண்டிக்குளப்பம்பட்டியில் இல்லம் தேடிக் கல்வி மையத்தில் ஆண்டு விழா



கந்தர்வகோட்டை பிப்.09-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிவண்ணன் வழிகாட்டுதலின் படியும், புதுக்கோட்டை மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், கந்தர்வகோட்டை வட்டாரக்கல்வி அலுவலர்கள் வெங்கடேஸ்வரி, நரசிம்மன், வட்டார வளமைய மேற்பார்வையாளர் பிரகாஷ் ஆகியோர்களின் ஆலோசனையின் படியும், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் இல்லம் தேடி கல்வித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கந்தர்வகோட்டை ஒன்றிய ஆண்டிக்குளப்பம்பட்டி இல்லம் தேடிக்கல்வி மையத்தில் ஆண்டு விழா நடைபெற்றது. தன்னார்வலர் மஞ்சுளா வரவேற்றார். நேதாஜி, வீரபாண்டிய கட்டப்பொம்மன், திருப்பூர் குமரன், அவ்வையார், அம்பேத்கர், பாரதியார், ராதாகிருஷ்ணன், ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், திருவள்ளுவர், வியாபாரிகள் ஆகிய வேடங்களில் மாணவர்கள் மாறுவேடம் அணிந்து அவர்களின் வரலாறு குறித்து பேசினார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்ட இல்லம்தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா விழா சிறப்புரையாற்றினார். மாணவர்கள் வாசித்தல், கதை, விளையாட்டு, பாடல்கள் மற்றும் எளிய அறிவியல் செயல்பாடுகள் மூலம் கற்று வருவது பெற்றோர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. கொரோனா கால கற்றல் இழப்புகளை சரி செய்து தற்போது அடிப்படை திறன்களையும், வாசிப்பு திறன்களையும் மனமகிழ்ச்சியுடன் கற்பதற்கு இல்லம் தேடிக் கல்வித் திட்டம் ஊக்கமாக மிகுந்த பயனளிப்பதாக மாணவ, மாணவிகள் தெரிவித்தனர்.

இந்நிழ்விற்கான ஏற்பாடுகளை தன்னார்வலர்கள் பிரேமா, செல்வமணி, கோமதி ஆகியோர் செய்திருந்தனர். நிறைவாக மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

# அரியலூர் மாவட்டத்தில் புதுமைப் பெண் திட்ட இரண்டாம் கட்ட தொடக்க விழா



அரியலூர் பிப்ரவரி.09-

அரியலூர் மாவட்டத்தில் புதுமைப்பெண் திட்ட இரண்டாம் கட்ட தொடக்க விழா நடைபெற்றது

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், சென்னை அருகே, பட்டாபிராம் இந்து கல்லூரியில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு, மாதம் ரூ.1000 வீதம், உதவித்தொகை வழங்கும் "புதுமைப் பெண்" இரண்டாம் கட்டத்திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சி அரியலூர் மாவட்டத்தில் காணொலிக் காட்சி மூலமாக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சியில் உள்ள, அன்னலெட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், புதுமைப் பெண் இரண்டாம் கட்டத் திட்டத்தில், 445 மாணவிகளுக்கு, மாதம் ரூ.1000 வீதம் உதவித்தொகைக்கான வங்கி பற்று அட்டையினை, மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமணசரஸ்வதி வழங்கினார். அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு, மாவட்ட சமூக நல அலுவலர் பூங்குழலி மற்றும் அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



மதுரை மாவட்டம், செல்லம்பட்டி அருகில் உள்ள ஸ்ரீ ஆண்டாள் மல்டி ப்ராடக்ட் கண்காட்சியில் விதவிதமான முறுக்கு பிழியும் இயந்திர கண்காட்சியும், விற்பனைக்கான மிஷனரியும் உள்ள புதிய கடையையும் செல்லம்பட்டி தி.மு.க தெற்கு ஒன்றிய செயலாளர் முத்துராமன் திறந்து வைத்தார். இவருக்கு ஆண்டாள் மல்டி ப்ராடக்ட் உரிமையாளர் துரை வண்ணன் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். இவர்களுடன் கார்த்திக் இளங்குட்டுவன் (மேனேஜிங் டைரக்டர்) ஐ.கே இன்ஜினியரிங், தீபன் (ஸ்ரீ ஆண்டாள் மல்டி ப்ராடக்ட்) எஸ்.எஸ்.பி இண்டஸ்ட்ரி கோயம்புத்தூர், விட்டல் இன்ஜினியரிங் காலேஜ் பெங்களூர் ஆகியோர் பங்கேற்றனர்.

### ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில்

# அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி 12-ந் தேதி தேர்தல் பிரசாரம்



ஈரோடு பிப்.09-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 27-ந் தேதி நடைபெறுகிறது. அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி அணியின் சார்பில் அ.தி.மு.க. வேட்பாளராக கே.எஸ்.தென்னரசு போட்டியிடுகிறார். தேர்தல் தேதி நெருங்கி வரும் நிலையில் தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த நிலையில், அ.தி.மு.க. வேட்பாளர் கே.எஸ். தென்னரசுவை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி வருகிற 12-ந்தேதி முதல் பிரசாரம் தொடங்குகிறார் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. 12-ந்தேதி பிரசாரத்தை தொடங்கும் எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து 5 நாட்கள் தீவிர பிரசாரம் செய்ய போவதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது. பின்னர் தேர்தலுக்கு முந்தைய 2 நாட்களிலும் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதனை ஆதரித்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வருகிற 13-ந் தேதி முதல் 15-ந்தேதி வரை 3 நாட்கள் பிரசாரம் செய்கிறார். 13-ந் தேதி மாலை திருநகர் காலனி பொதுக்கூட்டத்தில் சீமான் உரையாற்றுகிறார். தொடர்ந்து 2 நாட்கள் வேட்பாளருடன் பிரசாரம் செய்து ஆதரவு திரட்டுகிறார் என்று கட்சி நிர்வாகிகள் தெரிவித்து உள்ளனர்.

### சென்னை அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக

# நூல் நிலைய ஊழியர் மீது இளம்பெண் கற்பழிப்பு வழக்கு

சென்னை பிப்.09-

சென்னை அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகத்தில் ஊழியராக வேலை செய்பவர் மணிஅரசு(29). இவர் மீது இளம்பெண் ஒருவர் தேனாம்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார். அந்த புகார் மனுவில், மணிஅரசு என்னை காதலிப்பதாக கூறி அன்பாக பழகினார். என்னை திருமணம் செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்தார். அதை உண்மை என்று நம்பி அவருடன் நெருக்கமாக பழகினேன். இருவரும் உல்லாசம் அனுபவித்தோம். அதன் பலனாக இருமுறை நான் கர்ப்பம் அடைந்தேன்.

அவரது வற்புறுத்தலின் பேரில் இரண்டு முறையும் நான் கருவை கலைத்தேன். தற்போது அவர் என்னை திருமணம் செய்ய மறுக்கிறார். அவரது சொந்த ஊரான திருச்சி துறையூரில் வேறு பெண்ணை திருமணம் செய்ய முயற்சிக்கிறார்.அவர் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகார் மனு மீது விசாரணை நடத்தப்பட்டது. இதற்கிடையில் மணிஅரசு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்தார். ஆனால் முன்ஜாமீன் வழங்க மறுத்த நீதிமன்றம், மணிஅரசு மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. அதன்பேரில் அவர் மீது கற்பழிப்பு உள்ளிட்ட 3 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# திருப்பரங்குன்றம் அருகே மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம்



திருப்பரங்குன்றம் பிப்.09-

மதுரை திருப்பரங்குன்றம் அருகே மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம் மற்றும் தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பல்துறைப் பதிவுகள் மற்றும் ஆய்வுக் கோவை வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில் தமிழ்த் துறைத் தலைவர் பரிமளா வரவேற்புரை நிகழ்த்தினார். குமரகுருபரன் கருத்தரங்க அறிக்கையை வாசித்தார். கல்லூரி முதல்வர் வெங்கடேஸ்வரன் தலைமை ஏற்றார். பொறியாளர் இராஜகோபால், பொருளாளர் ஆழ்வார் சாமி முன்னிலை வகித்தனர். நூல் வெளியீட்டு வாழ்த்துறையாக செயலர் விஜயராகவன், ஒருங்கிணைப்பாளர் ராமசுப்பையா, பேராசிரியர் பிரபு ஆகியோர் உரையாற்றினர். கம்பன் கழகத் தலைவர் அழகர்நாதன், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் தனபால் ஆகியோர் . நூல் பெற்று சிறப்புரையாற்றினர்.

நூலை பெற்றுக் கொண்டு தமிழ் இலக்கிய மன்ற தலைவர் அவனிமாடசாமி விழாப்பேருரை ஆற்றினார். உதவிப் பேராசிரியர் செந்தில் குமார் நன்றி உரையாற்றினார். இவர்களுடன் தமிழ் துறை ராஜ்மோகன், உதவிப் பேராசிரியர் ரஞ்சித் குமார் உள்ளனர்.

# தேசிய குத்துச்சண்டை போட்டியில் ஜெ.ஜெ. கல்லூரி மாணவி வெண்கலப் பதக்கம்



புதுக்கோட்டை பிப்.09-

தேசிய அளவிலான கேலோ இந்தியா போட்டிகள் மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்றது. இதில் தேசிய அளவில் நடைபெறும் போட்டியில் கால் இறுதி போட்டி அளவில் தகுதி பெற்றவர்கள் மட்டும் பங்கு பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் சென்னையில் நடந்து முடிந்த தேசிய அளவிலான யூத் கேம்ஸ் குத்துச்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற ஜெ.ஜெ. கல்லூரி, உடற்கல்வித்துறையை சேர்ந்த முதலாமாண்டு மாணவி மாலதி தகுதி பெற்று போபாலில் நடைபெற்ற போட்டியில் தமிழக பெண்கள் குத்துச்சண்டை அணியின் சார்பாக பங்கு பெற்றார். இப்போட்டியில் தமிழகத்தின் சார்பாக 5 மாணவிகள் மற்றும் 5 மாணவர்கள் பங்கு பெற்றனர்.

இவர்களில் மாலதி என்ற மாணவி வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இந்திய குத்துசண்டை பெண்கள் பயிற்சிபெறும் அணியில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டியில் வென்ற மாணவியை கல்லூரி செயலாளர் சுப்பிரமணியன், முதல்வர் பரசுராமன், பயிற்றுநர் பார்த்திபன் மற்றும் உடற்கல்வி துறை தலைவர் ஜெகதீஷ் பாபு, பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டினர்.

# சட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்- அமைச்சர் மனோ தங்கராஜ் பேச்சு



சென்னை பிப்.09-

சட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என அமைச்சர் மனோ தங்கராஜ் கூறினார்.

நேரு யுவகேந்திரா சங்கத்தின் மாநில இயக்குநரகம், நாட்டு நலப்பணித் திட்ட மண்டல இயக்குநரகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை சார்பில் மாநில அளவிலான தேசிய இளைஞர் நாடாளுமன்ற விழாப் போட்டிகள் சென்னை எம்.ஐ.டி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பேசிய தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கூறியதாவது, சமூகப் பிரச்சனைகளை கண்டறிந்து விவாதித்தல், அவற்றை பதிவு செய்வது, அது சார்ந்த முடிவுகளை எடுப்பது ஆகியவை இந்த தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தில் நடைபெறும் என பேசினார். சட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் எனவும் நல்ல சமூக அமைப்பை கட்டமைத்து மேம்படுத்துவதற்கு இளைஞர் நாடாளுமன்ற அமைப்பு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் எனவும் இதை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்டுள்ள 78 போட்டியாளர்களிடமிருந்து முதல் மூன்று பரிசுகளை பெறுபவர்கள் பிப்ரவரி 23 மற்றும் 24 ஆம் தேதி தேசிய நாடாளுமன்ற போட்டிகளுக்கு அனுப்பப்படுவர். மாநில அளவில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு முதல் பரிசு ரூ. 2 லட்சம், இரண்டாவது பரிசு ஒரு லட்சத்து 50 ஆயிரம், மூன்றாவது பரிசு ஒரு லட்ச ரூபாயும் வழங்கப்படும். நிகழ்வில், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஹசன் மௌலானா, என்எஸ்எஸ் மண்டல இயக்குனர் சாமுவேல் செல்லையா, நேரு யுவகேந்திரா சங்கத்தின் மாநில இயக்குனர் செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வேலியே பயிரை மேய்ந்தது போல் காவலாளியே கொள்ளைக்காரனாக மாறிய சம்பவம் – எங்கு தெரியுமா?


சென்னை பிப்.09-

சென்னை, தியாகராயநகரில் உள்ள பிரபல துணிக்கடைக்கு சொந்தமான குடோனில் இருந்து ரூ.28 லட்சம் மதிப்புள்ள பட்டு புடவைகள் கொள்ளை அடிக்கப்பட்டது. ஆட்டோவில் பட்டுப்புடவைகளை கொள்ளை அடித்துச் சென்ற குடோன் காவலாளியை போலீசார் தேடி வருகிறார்கள்.

சென்னை தியாகராயநகரில் ரேகா கலெக்சன் என்ற பெயரில் பிரபல துணிக்கடை உள்ளது. அந்த கடைக்கு சொந்தமான குடோன் தியாகராய நகர் வடக்கு உஸ்மான் சாலை, திலக் தெருவில் உள்ளது. அந்த குடோனில் லட்சக்கணக்கான மதிப்புள்ள பட்டு புடவைகள் வைக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் வழக்கம் போல கடை ஊழியர்கள் வந்து குடோனை திறந்துள்ளானர். அப்போது குடோனில் இருந்த 26 பட்டுப்புடவை பண்டல்களை காணவில்லை. அவற்றை யாரோ கொள்ளையடித்து சென்றிருப்பது தெரிய வந்தது. அவற்றில் இருந்த பட்டுப்புடவைகளின் மதிப்பு ரூ.28 லட்சம் ஆகும்.

இது தொடர்பாக துணிக்கடை சார்பில் பாண்டி பஜார் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. காவல்துறையினர் விரைந்து சென்று விசாரணை நடத்தினார்கள். அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவை காவல்துறையினர் ஆய்வு செய்த போது குறிப்பிட்ட குடோனில் காவலாளியாக வேலை பார்த்த ராம் என்பவர், பட்டுப்புடவைகளை கொள்ளையடித்து ஆட்டோ ஒன்றில் இன்னொருவர் உதவியுடன் ஏற்றிச் செல்லும் காட்சி பதிவாகி இருந்தது. காவலாளி ராம் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர். அவரையும், அவருடன் இருந்த மற்றொரு நபரையும் காவல்துறையினர் தேடி வருகிறார்கள். காவலாளியே கொள்ளைக்காரனாக மாறி பட்டுப்புடவைகளை கொள்ளையடித்து சென்றுள்ள இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# புதுச்சேரியில் ப்ரீபெய்ட் மின் மீட்டர் திட்டத்தை ரத்து செய்ய கோரி காரைக்காலில் முற்றுகை போராட்டம்



காரைக்கால், பிப்,9

புதுச்சேரி மாநிலத்தில் மின் துறையை தனியார் மயமாக்குவதாக அறிவிப்புகள் வெளியாகி பின்னர் டெண்டர்கள் கோரப்பட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு இருந்து வந்த நிலையிலும் திட்டம் ரத்து செய்யப்படவில்லை.

மின்துறை ஊழியர்கள் உள்ளிட்ட அரசியல் கட்சியினர் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில் இத்திட்டம் நிறுத்தப்படவில்லை. இந்நிலையில் மின்துறை ஊழியர்கள் மின்துறையை தனியார் நயமாக்குவதை நிறுத்த கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் புதுச்சேரி மாநிலத்தில் ப்ரீபெய்ட் மின்மீட்டர் திட்டத்தை அமல்படுத்த உள்ளதாக புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

இதனை கண்டித்தும், நிறுத்த வலியுறுத்தியும் காரைக்கால் மக்கள் போராட்ட குழுவின் ஒருங்கிணைப்பாளர் அன்சாரி பாபு தலைமையிலும் சூர்யா முன்னிலையிலும், பல்வேறு அரசியல் கட்யினர், சமூக அமைப்பினர் இன்று காரைக்கால் மாவட்ட மின் துறையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் மின்துறை அருகில் திரண்டதால் போலீசார் தடுப்புகளை அமைத்து அலுவலகத்திற்கு முன்பாகவே அவர்களை தடுத்து நிறுத்தினர்.

பின்னர் போராட்டக்காரர்கள் புதுச்சேரி அரசு மற்றும் மத்திய அரசை கண்டித்து கண்டனம் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கு மேற்பட்டோரை போலிசார் கைது செய்தனர். ப்ரீபெய்டு மின் கட்டணம் என்பது வளரும் நாடுகளில் இல்லாத போது புதுச்சேரியில் மட்டும் கொண்டுவருவது புதுச்சேரி மாநிலத்தை சோதனை கூடமாக பயன்படுத்துவதை கண்டிப்பதாகவும், இத்திட்டம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி இத்திட்டத்தை முறியடிப்போம் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# என் மீதான இந்தியாவின் நம்பிக்கை எதிர்க்கட்சிகளுக்கு புரியாது

# ஈரோடு கிழக்கு தொகுதியில் எடப்பாடி பழனிச்சாமி 12ஆம் தேதி பரப்புரை





# புதுச்சேரியில் ப்ரிப்பெய்டு மின் மீட்டர் திட்டம் காரைக்காலில் போராட்டம்


| சென்னை / புதுக்கோட்டை | 09.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மதுரை சோமு , தமிழகக் கருநாடக இசைப் பாடகர் (பி.1919) (இ.1989)



ஏ. ஆர். அந்துலே , மகாராட்டிராவின் 8வது முதலமைச்சர் (பி.1929) (இ.2014)



சி. பஞ்சரத்தினம் , இந்திய இயற்பியலாளர் (பி.1934) (இ.1969)



கிளென் மெக்ரா , ஆத்திரேலியத் துடுப்பாளர் (பி.1970)



## இன்றைய நினைவு நாள்

ஜி. ஜி. பொன்னம்பலம் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, வழக்கறிஞர் (பி.1901) (இ.1977)



எம். சி. சாக்ளா , இந்திய அரசியல்வாதி (பி.1900) (இ.1981)



ச. ராஜாபாதர் , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், பொதுவுடமைவாதி (பி.1916) (இ.1986)



வ. விஜயபாஸ்கரன் , தமிழக எழுத்தாளர் (பி.1926) (இ.2011)

